முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 256, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

256—

இரத்த சுத்திகரிப்பு பிரிவு

***2258—திரு. ஆர். காந்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராணிப்பேட்டை தொகுதி, வாலாஜா அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் இரத்த சுத்திகரிப்பு பிரிவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) வாலாஜா அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் dialysis equipment *வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். ஏற்கெனவே, அந்த மருத்துவமனையில் 3* dialysis equipment *செயல்பட்டு வருகின்றன. கடந்த ஓராண்டு மட்டும் 814 பேருக்கு அந்த மருத்துவமனையில்* dialysis *செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, அந்த மருத்துவமனையில் உள்ள நோயாளிகளின் தேவைக்கேற்ப, இன்னும் கூடுதலாகவும்* dialysis *கருவிகள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.*

2018 ஜூலை 3]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, வாலாஜா அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில்* dialysis unit *அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று 30-6-2016 அன்று நான் கேள்வி கேட்டேன். நான் கேள்வி கேட்டு,* correct *ஆக இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. அந்தக் கேள்வி இன்றைக்குத்தான் வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லாவற்றிலும் கெட்டிக்காரர். எதை எதை நிறைவேற்றிவிட்டாரோ அந்தக் கேள்விதான் எதிர்க்கட்சியான எங்களுக்கு வருகிறது. காரணம், இரண்டு வருடங்களுக்குப் பிறகு இந்தக் கேள்வி வந்திருக்கிறது. ஆனால், நான் கேட்ட 50-வது நாளே, 30-8-2016 அன்றே அங்கு* dialysis *பிரிவு ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. வாலாஜா அரசு மாவட்ட மருத்துவமனையைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். காரணம், அது ஒரு நல்ல மருத்துவமனை. அந்த மருத்துவமனை கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான் திறக்கப்பட்டது. அங்கு ஒரு நாளைக்கு* outpatient *ஆக 1,200 பேர் வருகின்றார்கள். அதுமட்டுமல்லாமல், இரண்டு வருடங்களுக்கு முன்பே அந்த மருத்துவமனையில் 100 படுக்கைகள் இருந்தன. இப்போது, 100 படுக்கை வசதிக்காக ஒரு கட்டடம் கட்டப்பட்டு, டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 9-9-2017 அன்று திறக்கப்பட்டது. அந்தக் கட்டடத்தில் தற்போது எத்தனை படுக்கைகள் இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எத்தனை படுக்கைகள் இருக்கின்றன என்றால், 30 படுக்கைகள் இருக்கின்றன. அவையும்* Primary Health Centre-*லிருந்து கடனாக வாங்கிக் கொண்டுவந்து வைக்கப்பட்டிக்கின்றன. அந்தக் கட்டடத்தைத் திறந்து 10 மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் அந்த மருத்துவமனையில் படுக்கை வசதிகள் பூர்த்தியாகவில்லை. இதற்கு உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோல், அந்த மருத்துவமனைக்கு 120 கே.வி.ஏ. திறன்கொண்ட ஒரு ஜெனரேட்டர் தேவைப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், இந்த dialysis centre-*க்கும் ஜெனரேட்டரே கிடையாது. அங்கு நோயாளிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதன் அவசியம் கருதி அங்கு ஒரு 40 கே.வி.ஏ. திறன்கொண்ட ஜெனரேட்டர் தேவை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு*

உடனடியாக ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, dialysis equipment-ஐ பொறுத்தவரைக்கும், தமிழ்நாடு முழுவதும் நாம் அதிக முக்கியத்துவத்தைக் கொடுக்கிறோம். இந்த ஆண்டுகூட புதிதாக 200 dialysis equipments-ஐ மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கும் வழங்கப் போகிறோம். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் கோரிய அந்த மருத்துவமனையிலும் இவ்வசதி அதிகப்படுத்தப்படும். ஜெனரேட்டரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். பொதுவாக, அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் Operation Theatre ஆகியவை செயல்படுவதால் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மின்சாரத் துறை மூலமாக Uninterrupted Power Supply வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட ஜெனரேட்டர் வசதியும், படுக்கை வசதியும் உடனடியாகச் செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி அவர்கள்.

திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும், இங்கு ** எப்போதுமே சம்பந்தம் இருக்காது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் இப்படியெல்லாம் நீங்கள் சொல்லக் கூடாது. (குறுக்கீடு)

திரு. ஆர். காந்தி: இருப்பதைத்தான் நான் சொல்கிறேன். சொல்லாதீர்கள் என்றால் எப்படி?

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் பேசும்போது இப்படியெல்லாம் சொல்லக் கூடாது. (குறுக்கீடு) நீங்கள் பேசிய அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.*

திரு. ஆர். காந்தி: *நான் என்றைக்கோ ஒருநாள் பேசுகிறேன். நீங்கள் இருக்கின்ற நிலைமையைச் சொல்லாதீர்கள் என்று சொன்னால் எப்படி?*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *கேள்வி நேரத்தில் நீங்கள் குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. நீங்கள் வேறு ஏதாவது பொருள் பற்றி விவரமாகக் கேளுங்கள்.*

திரு. ஆர். காந்தி: *டெங்கு காய்ச்சல் வந்தபோது எங்களுடைய செயல் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "நீங்கள் ஆங்காங்கு சென்று ஆய்வு செய்யுங்கள்,* hospital-*ஐ சென்று பாருங்கள். அதேமாதிரி, எங்கெங்கு தண்ணீர் நிற்கின்றதோ,* municipality *பகுதிகளிலுள்ள இடங்களுக்கெல்லாம் சென்று பாருங்கள்" என்று எங்களுக்கு ஓர் ஆணையிட்டார்கள். அப்போது, இதே* hospital-*க்கு நான் சென்றிருந்தேன். அந்தச் சமயத்தில் மருத்துமவனையில் யாருமே இல்லை. ஒரேயொரு* patient *மட்டும்தான்* bed-*ல் இருந்தார். அதைப்பற்றி கேட்டால் சந்தேகமாக இருக்கிறது என்று மருத்துவர் சொன்னார். அப்போது நான் சந்தேகம் என்றால் எப்படி என்று கேட்கும்போது, அந்த டாக்டர் சொன்னார். இந்த . . .*

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்விக்கு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஆர். காந்தி: *நான் கேள்விக்கு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் நிதானமாகப் பேசுகிறீர்கள். (குறுக்கீடு)*

திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவசரப்படாதீர்கள். (குறுக்கீடு) அந்த*

மருத்துவமனைக்கு டெங்கு காய்ச்சலை கண்டுபிடிப்பதற்காக blood cell counting machine வேண்டுமென்று அந்த மருத்துவர் சொன்னார். அந்த மருத்துவமனையில் அந்த machine இல்லாததால், blood cell count-ஐ check செய்வதற்கு தினமும் வேலூர் மருத்துவமனைக்கு அனுப்ப வேண்டியுள்ளது என்று சொன்னார். அப்போது அந்த machine என்ன விலை என்று நான் கேட்டேன். ரூ.5 இலட்சம் ஆகுமென்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கதை மாதிரி சொல்ல முடியாது. சுருக்கமாகக் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான விஷயம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நேரமில்லை.*

திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது மிகவும் முக்கியமான விஷயம். நீங்கள் ** பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அரை மணி நேரமாக . . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: Short *ஆக கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஆர். காந்தி: *நீங்கள் ***

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *இவ்வளவு நேரம் கேள்வியே கேட்டுக்கொண்டிருந்தால் எப்படி?*

திரு. ஆர். காந்தி: *நீங்கள் ** பேசிக்கொண்டேயிருக்கிறீர்கள். இது முக்கியமான பிரச்சினை. அங்கு என்ன வசதிகள் செய்ய வேண்டுமென்பதைச் சொல்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அதை எப்படிக் கேட்க வேண்டுமோ, அப்படிக் கேளுங்கள்.*

திரு. ஆர். காந்தி: *உடனடியாக. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2018 ஜூலை 3]

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்று சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள். எவ்வளவு நேரம் கேள்வியைக் கேட்டுக்கொண்டிருப்பீர்கள். அதற்கு ஒரு நடைமுறை இருக்கிறது.*

திரு. ஆர். காந்தி: *நான் என்ன சொல்லப்போகிறேன் என்று தெரியாமல் நீங்கள் இப்போதே பதில் சொன்னால் எப்படி?*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அதற்கென்று ஒரு மரபு இருக்கிறது.*

திரு. ஆர். காந்தி: *நான் கேட்டவுடன், அங்கேயிருந்த* Superintendent *உடனே வந்தார். இந்தக் கருவியின் விலை எவ்வளவு என்று கேட்டதற்கு, ரூ.5 இலட்சம் என்று சொன்னார். உடனே 6 நாட்களுக்குள் அதை நானே* Mitsubishi company-*யிடமிருந்து* C.S.R. *மூலம் வாங்கி அவர்களுக்குக் கொடுத்துவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

அதேமாதிரி நகராட்சிப் பகுதியை ஆய்வு செய்ய சென்றேன். அங்கே மொத்தம் 24 வார்டுகள். நான் சென்றதற்கு முன்தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆய்வு செய்திருந்தார். இரண்டாவது நாள், நான் சென்றேன். அந்தப் பகுதி bus stand-*ல் கழிவுநீர் ஓடுகிறது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்கிறீர்களா? சரி, சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் ஏதேதோ சப்ஜெக்ட்டில் மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல் பேசுகிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, போதும். மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்திலே, நீங்கள் அப்படிப் பேச முடியாது. (குறுக்கீடு) கேள்வி நேரத்திலே (குறுக்கீடு) இல்லை, இத்தனை பேரும் பேசக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்திலே, மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல் பேசுகிறீர்கள். (குறுக்கீடு)* Come to the point. You ask the question. *கேள்வியைக் கேளுங்கள். (குறுக்கீடு) இத்தனை பேர் பேசக் கூடாது.*

*** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[2018 ஜூலை 3

திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு வாய்ப்புத் தாருங்கள். அங்கே போனவுடன். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *என்ன முறை இது? மற்ற உறுப்பினர்களுக்கு நான் வாய்ப்புத் தர வேண்டாமா?*

திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருங்கள். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நீங்கள் கேள்வி கேட்கப் போகிறீர்களா, இல்லையா?*

திரு. ஆர். காந்தி: *நான் முக்கியமான பிரச்சினையைப் பற்றிச் சொல்கிறேன், அதைக் கேளுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அது முறையில்லை. நீங்கள் கேள்விக்கு வாருங்கள் என்று சொன்னால் (குறுக்கீடு) இத்தனை பேர் ஏன் பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் சொல்லுங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வாய்ப்புத் தர முடியாது. கேள்விதான் கேட்கச் சொல்கிறேன்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நீண்ட நாட்களுக்குப் பிறகு கேள்வி கேட்கிறார். அவருக்கு நீங்கள் அனுமதி தந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) அவருடைய சுபாவம் அப்படி. அவர் குற்றச்சாட்டு எதையும் சொல்லவில்லை. நடந்த சம்பவங்களைத்தான் அவர் சொல்கிறாரே தவிர, குற்றச்சாட்டோ அல்லது குறைபாடுகளையோ சொல்லவில்லை. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, அங்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளைக் களைவதற்கான*

2018 ஜூலை 3]

நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு, அந்த மருத்துவமனையில் இருக்கக்கூடிய பிரச்சினைகளைத்தான் சொல்கிறார். அதற்கு நீங்கள் அனுமதி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நான் மற்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்புத் தர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஆர். காந்தி: *நான் செய்தவற்றைச் சொல்கிறேன். சொன்ன உடனே. . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *கேள்விக்கு வாருங்கள்.*

திரு. ஆர். காந்தி: *அந்த* bus stand-*ல் ஆய்வு செய்தேன். கழிவுநீர் வெளியே சாலைகளில் தேங்கி* maintenance *இல்லாமல் இருந்தது. அந்தப் பணியை* contract-*க்கு விட்டிருந்தார்கள். உடனே எங்களுடைய தளபதி அவர்கள் ஆணையிட்டதன்பேரில், அந்த இரவே அவற்றைச் சுத்தம் செய்தோம். பின்னர், 24 வார்டுகளுக்குச் சென்றோம். எங்கே பார்த்தாலும் குப்பையாக இருந்தது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், மருத்துவத் துறை சம்பந்தமாகப் பேசுங்கள். (குறுக்கீடு) மருத்துவத் துறை சம்பந்தமாகப் பேசுங்கள்.*

திரு. ஆர். காந்தி: Dustbin *வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கேளுங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுவதுபோல் பேசுகிறீர்கள்.*

திரு. ஆர். காந்தி: *ரூ.20 இலட்சம் செலவில் அவற்றையும் வாங்கிக் கொடுத்தேன். இதை எதற்கு நான் சொல்கிறேன் என்றால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் கேட்ட 100 படுக்கை வசதிகள்,* generator *வசதி போன்றவற்றை செய்து கொடுக்கவில்லை என்றால், 2 மாதத்திற்குள் அவற்றை நானே செய்து தந்துவிடுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2018 ஜூலை 3

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்* dialysis machine *வேண்டுமென்று கேள்வியை எழுப்பினார்.* Dialysis equipment *அரசு சார்பில் வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 'நான் ஆய்வுக்குச் சென்றபோது அங்கே* blood cell counting machine *இல்லை; நான் அதை* CSR *மூலம் வாங்கிக் கொடுத்துவிட்டேன்' என்று சொன்னார். அண்ணன் அவர்களின் பலம் என்னவென்று எங்களுக்குத் தெரியும். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுக்கு நான் ஒரு தகவலைச் சொல்கிறேன். டெங்கு காய்ச்சல் வந்தபொழுது, இந்திய அளவில் நம்முடைய தமிழ்நாடு மாநிலத்தில் மட்டும்தான் 900* blood cell counter *கருவிகள் வாங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே அவ்வளவு பெரிய அளவில்* procurement *கிடையாது. உலகத்தரம் வாய்ந்த 900* cell counter *கருவிகள் 25 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை மருத்துவமனைகளுக்கும் இக்கருவிகள் கொடுக்கப்பட்டுள்ளன. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களும் அங்கே சென்று அவற்றைப் பரிசோதித்தார்கள். ஒரு* blood analysis *என்பது காலையில் கொடுத்தால் அதனுடைய முடிவு மாலையில் வரும்; மாலையில் கொடுத்தால் அடுத்த நாள் காலையில் முடிவு வரும். ஆனால்,* within a minute, *ஒரு நிமிடத்திற்குள், 50* seconds-*க்குள் அந்த* blood result *வரக்கூடிய அளவிற்கு, அதாவது 16 வகையான* blood result-*ம் வரக்கூடிய அளவிற்கு 900* blood cell counters-*ஐ கருவிகளை உடனடியாக வாங்கிக் கொடுத்த ஒரே அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் நீங்கள் சொன்ன இந்த* basic amenities like bed, generator *ஆகிய எல்லா வசதிகளும் உடனடியாக செய்து தரப்படும். சட்டமன்றத்தில் நாங்கள் பொறுப்பேற்று சொல்கின்றோம்.*

முற்பகல் 10-50

உங்கள் கண்களுக்கு முன்னாலே இன்றைக்கு மத்திய அரசுகூட எங்களைப் பாராட்டிக்கொண்டிருக்கின்றது. மக்கள் நல்வாழ்வுத் துறையானது தொடர்ந்து சாதனையினுடைய சிகரத்திற்கு சென்றுகொண்டிருக்கின்றது. பேச்சுக்கும், செயலுக்கும் 100 சதவிகிதம் சம்பந்தம் இல்லாமல் எப்படி இருக்கும் என்று

2018 ஜூலை 3]

சொன்னால், அதாவது 10 நாட்களில் என்று சொன்னால், 5 நாட்களில் செய்துவிடுவோம். அந்த சம்பந்தம் வேண்டுமானால் இல்லாமல் இருக்கலாமேயொழிய, 10 நாட்களில் என்பது 15 நாட்கள் என்று சம்பந்தம் இல்லாமல் இருக்காது. Well within time, *சொன்ன காலத்திற்கு முன்னதாகவே செய்யக்கூடிய அரசு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக, நீங்கள் கேட்டது உடனடியாகக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.*

திரு. எஸ். ஆஸ்டின்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நெல்லை, குமரி மாவட்டங்களுடைய எல்லைப் பகுதியில் அஞ்சுகிராமம் பேரூராட்சிப் பகுதி அமைந்திருக்கின்றது. அதைச் சுற்றி கிட்டத்தட்ட 50-க்கும் மேற்பட்ட சிற்றூர்கள் இருக்கின்றன. அது ஒரு மிகப் பெரிய வியாபார ஸ்தலம். தினமும் 10 ஆயிரம் பேர் அங்கே வந்து செல்கின்றார்கள். அதற்கு மிக அருகில் கூடங்குளம் அணு மின் நிலையம் இருக்கின்றது. அங்கே பணியாற்றக்கூடிய பணியாளர்கள், அதிகாரிகளுடைய குடியிருப்புகள் எல்லாம் இந்தப் பகுதியில் இருக்கின்றன. அங்கே ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கான அரசு இடமும் இருக்கின்றது. மாவட்ட துணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து, இயக்குநர் அலுவலகத்திற்கு அதற்கான* proposal-*லும் வந்திருப்பதாக நான் அறிகின்றேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கனிவோடு பரிசீலித்து, இந்த ஆண்டே அந்தப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு ஆணையிடுவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஆய்வு செய்து, கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்*

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா வரிசை எண் 257, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

257—

வீட்டுமனைப் பட்டா

***2598—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, மாம்பாக்கம் கிராமம், மாம்பாக்கம் சத்திரம் சர்வே எண் 5/3-ல் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

திருத்தணி தொகுதி, மாம்பாக்கம் கிராமம், மாம்பாக்கம் சத்திரம் சர்வே எண் 5/3-ல் வசிப்பவர்களுக்கு அவர்களுடைய நிலமானது இலுப்பை தோப்பு புறம்போக்கு என்ற வகைப்பாட்டினைச் சார்ந்தது என்பதால், தற்போது வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற திருத்தணி தொகுதியில் அடங்கி இருக்கின்ற மாம்பாக்கம் சத்திரம் என்கிற கிராமத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக கிராம நத்தமாக வகைப்பாட்டினை மாற்றி வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்றேன். மேலும், தமிழகத்தின் தன்னிகரில்லா தலைவராக,